**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 428/2019 P.W. 6/L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. மகேஷ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. பால்ராஜ் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.05.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் A2, A5, A6 ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. A1, A3, A4, A7 ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.4 வரையான அனைவரையும் எனக்குத் தெரியும். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். அவர்கள் அனைவரும் எங்கள் பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்கள். 2015ம் வருடம் கிறிஸ்துமஸ் அன்று (25.12.2015) மாலை 07.30 மணி முதல் 08.00 மணிக்குள் நான் வீட்டில் இருந்த பொழுது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கையில் கம்பு, கம்பி போன்ற ஆயுதங்களை வைத்துக் கொண்டு சத்தம் போட்டு நடந்து சென்றுக் கொண்டிருந்தார்கள்.

2. அதன்பிறகு சிறிது நேரத்தில் எங்களது வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் அடி சம்பவம் நடந்துக் கொண்டிருந்தது. அதில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்த சுபாஷ், கிருஷ்ணன், சுப்பையா, சிவகுமார், ராமச்சந்திரன் ஆகியோர்களை அடித்து காயப்படுத்தினார்கள். நான் சம்பவயிடம் சென்று அடிபட்டிருந்த எங்கள் ஊரைச் சேர்ந்த நபர்களை வினு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் அடி சம்பவம் நடந்து முடிந்த பின்னர் தான் சம்பவயிடம் சென்றேன் என்றால், சத்தம் கேட்டு அங்கு சென்ற பொழுது சம்பவம் முடிந்திருந்தது. போலிசார் எப்பொழுது சம்பவயிடம் வந்தார்கள் என்றால், சம்பவம் நடந்த அரைமணி நேரத்தில் வந்தார்கள். சம்பவம் நடைபெற்ற பகுதி ஒரு இருட்டான பகுதி என்றால், சரிதான். ஆனால் முகங்களை பார்த்தால் தெரியும் அளவிற்கு இருந்தது.

2. என்னை எங்கு வைத்து எப்பொழுது போலிசார் விசாரணை செய்தார்கள் என்றால், சம்பவயிடத்தில் வைத்து அன்றைய தினமே இரவு 08.00 மணிக்குள் விசாரணை செய்தார்கள். காயம்பட்ட நபர்கள் எனது நண்பர்கள் என்றால், சரிதான்.

3. காயம்பட்ட நபர்கள் எனது நண்பர்கள் என்பதால் நான் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

<u>(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )</u>

**<u>C.C.No. 428/2019 P.W. 7/L.W.8</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜு | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. செல்லம் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.05.2026.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை :</u>**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் A2, A5, A6 ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. A1, A3, A4, A7 ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து பெயிண்டராக பணி செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.6 வரையான அனைவரையும் எனக்குத் தெரியும். அவர்கள் அனைவரும் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும்.

2. 2015ம் வருடம் கிறிஸ்துமஸ் அன்று (25.12.2015) மாலை சுமார் 07.45 மணியளவில் நான் பொருட்கள் வாங்க பணவிளை ஜங்சனுக்கு சென்றிருந்தேன். அப்பொழுது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கையில் கம்பு, கம்பி போன்ற ஆயுதங்களை வைத்துக் கொண்டு சத்தம் போட்டு ஓடிக் கொண்டிருந்தார்கள். நான் உடனே அருகில் சென்று பார்த்த பொழுது அங்கு ஒரு அடி சம்பவம் நடைபெற்றிருந்தது.

3. அதில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்த சுபாஷ், ஸ்ரீ கிருஷ்ணன், சுப்பையா, சிவகுமார், ஆண்டோ ஜான்பிரிட்டோ ஆகியோர்களை அடித்து காயப்படுத்தினார்கள். நான் சம்பவயிடம் சென்று அடிபட்டிருந்த எங்கள் ஊரைச் சேர்ந்த நபர்களை வினு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு போலிசார் வந்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவயிடத்தில் சுமார் 30 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால், சரிதான். சம்பவயிடத்தில் யார் யாரை தாக்கினார்கள் என்ற விவரத்தை குறிப்பிட்டு என்னால் கூறி இயலாது என்றால், சரிதான். போலிசார் என்னை எங்கு வைத்து எப்பொழுது விசாரணை செய்தார்கள் என்றால், சம்பவயிடத்தில் வைத்து அன்றைய தினமே இரவு 08.10 மணிக்குள் விசாரணை செய்தார்கள்.

2. காயம்பட்ட நபர்கள் எனது நண்பர்கள் என்றாலும், எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றாலும், சரிதான். காயம்பட்ட நபர்கள் எனது நண்பர்கள் என்பதால் நான் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.